அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.82.75 லட்சம் மதிப்பீட்டில் கோவிலாங்குளம், பெரிய கரிசல் குளம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுவதற்கான பணியினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். உடன் விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, நகர் மன்றத் தலைவர் சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், நகர திமுக செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வேலுச்சாமி, பொதுக் குழு உறுப்பினர் கொப்பையா ராஜ், மாவட்ட கவுன்சிலர் பாலச்சந்தர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அழகு ராமானுஜம், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் வெங்கட் ராமன், ஜே.சி.பி.சுபா, உதவியாளர் பேச்சிமுத்து ஆகியோர் இருந்தனர்.

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், கல்குறிச்சியில் அமைந்துள்ள சமத்துவபுரத்தில் சுயமரியாதை சுடர் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , ராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கானி ஆகியோர்கள் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் காரியாபட்டி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் முத்துமாரி, துணைத் தலைவர் ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் தமிழ்வாணன், ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், செல்லம் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

நாகையில் ரூ.5.08 கோடி மதிப்பில் 121 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்! என்.கௌதமன், உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை.டிச.30-

நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் 36 மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் உள்ளிட்ட 121 பயனாளிகளுக்கு ரூ. 5.08 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நாகை மாவட்ட ஆட்சிதலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் 36 மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர், 15 மாற்றுத்திறனாளிகளுக்கு செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கான திறன் பேசியும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பல் 11 பயனாளிகளுக்கு இலங்கை அரசால் சிறை பிடிக்கப்பட்டு மீட்க இயலாத விசை, நாட்டுபடகு உரிமையாளயர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் நிவாரணத் தொகை உள்ளிட்ட 121 பயனாளிகளுக்கு ரூ. 5.08 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி வழங்கினார்.

நிகழ்ச்சியில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகை மாலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், மறைமலை மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கார்த்திகேயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் அல்வாஎடிசன், மகா. குமார், ஆர்.டி.எஸ்.சரவாணன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், சிக்கல் என்.ஆனந்த், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் முகமது சுல்தான், மரியசார்லஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ. பழனியப்பன், கோசி.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, பி.என். கார்த்தி, இளம்.சுந்தர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி அளித்த பேட்டியில் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் மேம்பட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் எண்ணற்ற பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மகளிர்களுக்கு பலவேறு நலதிட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நாகை, வேதாரண்யம் நகராட்சிகளில் பேருந்து நிலையம், வேதாரண்யம் நகராட்சியில் மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம், வேளாங்கண்ணி அக்கரைபேட்டை இடையே மேம்பாலம் கட்ட நிதி, பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத் துறை சார்பில் வாய்மேடு பகுதியில் தடுப்பணை, மகளிர் திட்டத்தின் கீழ் நிதி போன்றவைகளை பெற்று வளர்ச்சி பாதையில் செல்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாற்றுத்தறினாளிகளின் நலத்துறை சார்பில் ரூ. 34.64 லட்சத்தில் மதிப்பீட்டில் 36 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருதப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், ரூ. 2.10லட்சம் மதிப்பீட்டில் 15 மாற்றுத்திறநாளிகளுக்கு செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்டவர்களுக்கான திறன்பேசியையும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ. 58லட்சம் மதிப்பீட்டில் 11 பயனாளிகளுக்கு இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு மீட்க இயலாத விசைப்படகுகள் மற்றும் நாட்டுபடகுகள் உரிமையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகைக்கான காசோலையினையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றம் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ரூ. 15.49 லட்சம் மதிப்பீட்டில் 1 பயனாளிக்கு கம்பிவேலி தயாரித்தல் தொழில் தொடங்குவதற்கான ஆணையினையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ. 11,276 மதிப்பீட்டில் 2 பயனாளிகளுக்கு அயன்பாக்ஸ்சும், மகளிர் திட்டம் சராபில் ரூ. 3.95 கோடி மதிப்பீட்டில் 51 பயனாளிகளுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்குதற்கான ஆணை என ரூ. 5.08 கோடி மதிப்பில் 121 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி கூறினார்.

கன்னியாகுமரி வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

நெல்லை மாவட்டத்தில் 3 இடங்களில் சிறப்பான வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் – பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை.டிச.30-

இன்று 30.12.2024 கன்னியாகுமரி நடைபெறும் அய்யன் திருவள்ளுவர் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக காலை 9 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து கன்னியாகுமரி செல்லும் நம் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சரான கே.என்.நேரு தலைமையில் நெல்லை மாவட்டத்தில் 3 இடங்களில் 1 லட்சம் கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் திரண்டு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது. என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அது தொடர்பாக அவர்கள் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

கன்னியாகுமரி நடைபெறும் அய்யன் திருவள்ளுவர் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இன்று 30.12.2024 காலை 9 மணிக்கு தூத்துக்குடியில் இருந்து கன்னியாகுமரி செல் லும் நம் கழகத் தலைவர் திராவிட மாடல் முதலமைச் சர் அவர்களை நகராட்சி நிர் வாக துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே. என்.நேரு தலைமையில் நெல்லை மாவட்டத்தில் 3 இடங்களில் 1 லட்சம் கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் திரண்டு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

அதன்படி காலை 9 மணிக்கு முதல் வரவேற்பானது கே.டி.சி நகர் பாலம் அருகிலும்,2 வது வரவேற்பானது நாங்குநேரி நீதிமன்றம் எதிரிலும்,3 வது வரவேற்பானது காலை 10 மணிக்கு பணகுடி பைபாஸ் அருகில் நெருஞ்சி காலனி பகுதியிலும் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படுகிறது.

எனவே கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் நம் கழக முதல்வர் அவர்களை வரவேற்றிட கழக இருவண்ண கொடிகளுடன் திரளாக கலந்து கொண்டு வரவேற்றிட அன்புடன் கேட்டுக் கொள்வதோடு,இந்த வரவேற்பில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், கழக சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு நம் திராவிட முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுத்திட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர்

ஜி.கே.வாசன் பிறந்த நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் வாழ்த்து!

சென்னை, டிச.30-

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் பிறந்தநாளையொட்டி அவரை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (28.12.2024) பிறந்தநாள் காணும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜி.கே.வாசன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வி.எம்.ஆர். சபாபதி

டிசம்பர் 30 (2009)

சென்னை, ஆயிரம்விளக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைத் தலைவர், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தொடர்ந்து 35 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

தொழிலாளர்களுக்கு பல உரிமைகளை பெற்றுத் தந்து, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக தமிழகம் முழுவதும் அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

‘தன்மான முரசமாக, தகுதிமிக்க தொழிலாளர் சங்கமாக முழங்கிய என்தோழன், முன்னணிக் கழகத் தொண்டன், முடிவெய்திய செய்தி கேட்டு முடிவில்லா சோகத்தில் ஆழ்ந்ததே பாட்டாளி வர்க்கம்! தொழிலாளர் துணைவன் மறைந்தாரே!” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

நாகையில் தி.மு.க. சார்பில்

சுனாமி நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் நடைபெற்றது!

நாகை. டிச. 29-

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் தேதி இந்தோனேஷியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுனாமி உருவானது. இதனால் தமிழக கடலோர பகுதிகளில் ஆழிப்பேரலை உருவாகி பெரும் அளவில் உயிர்சேதம், பொருள் சேதம் ஏற்படுத்தயது. இதில் நாகை, மயிலாடுதுறை மாவட்டத்தில் உயிர்சேதம் அதிகம் இருந்தது. நெஞ்சை விட்டு நீங்காத இந்த சம்பத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நாகை மாவட்டத்தில் கடலோ பகுதிகளில் சுனாமி நினைவு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

நாகையில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. சார்பில் 20ம் ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு அமைதி ஊர்வலம் மற்றும் நினைவு ஸ்தூபில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நாகை பழைய பேருந்து நிலையத்தில் இருந்து கழகத்தினர் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் தலைமையில் ஊர்வலமாக நாகை கடை வீதி வழியாக சென்று நாகை துறை முகத்தில் உள்ள சுனாமி நினைவு ஸ்தூயில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மறைமலை, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், துணைச் செயலாளர் சோ. ரவிச்சந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கே. பழனியப்பன், ஆ.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், மகா.குமார், சிக்கல் என். ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ. பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா. மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில் குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் சி.சுப்பர மணியன், முகமது சுல்தான், மரியசார்லஸ், அட்சயலிங்கம், பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி. சார்லஸ், கோசி.குமார், பன்னீர் செல்வம், கே.பாண்டியன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இரா.முருகையன், ப. உதயக்குமார், அ.பாரிபாலன், ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, இளம்.சுந்தர், கேஸ் வி.செந்தில், கமல், பால. முரளி, க.சத்தியமூர்த்தி, எஸ். புவனேஷ்வரி, எஸ்.பால்ராஜ், பெ. முருகானந்தம் மற்றும் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

‘மகா’ டிசைன்ஸ் மகாராஜனின் தந்தை

ஆ.சச்சிதானந்தம் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி! விழுப்புரத்தில் இறுதி ஊர்வலம்!

சென்னை, டிச. 30-

கழகத்தினரின் விளம்பரங்களை வடிவமைத்திடும் இராயப்பேட்டையில் உள்ள ‘மகா’ டிசைன்ஸ் மகாராஜனின் தந்தை ஆ. சச்சிதானந்தம் (வயது 94) 29.12.2024 ஞாயிறு காலை 7.10 மணியளவில் விழுப்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில், இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (30.12.2024-திங்கள்) காலை 11 மணியளவில் அவரது சொந்த ஊரான விழுப்புரம், கீழ் பெரும்பாக்கம் எண்.39, கண்ணகித் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கீழ் பெரும்பாக்கம் இடுகாட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெறுகின்றன.

மறைந்த சச்சிதானந்தம் அவர்களுக்கு மகாராஜன் உள்பட 3 மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மானாகுடியில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா உட்பட முப்பெரும் விழாவில் நடைபெற்ற வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கு தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எம். ஜெயராமன் பரிசுகள் வழங்கி பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில் மானாகுடி கிளை செயலாளர் அய்யப்பன் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் அழகு சுந்தரம், மனோகரன் உள்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

குமரி முனையில் முத்தமிழறிஞர் கலைஞர் நிறுவிய

திருவள்ளுவர் பேரறிவுச் சிலைக்கு வெள்ளி விழா!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று முதல் நடைபெறுகிறது!

சென்னை, டிச.30- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் பேரறிவுச் சிலை (STATUE OF WISDOM) வெள்ளி விழா இன்று முதல் கோலாகலமாகவும், பட்டிமன்றம், கருத்தரங்கம் நிகழ்ச்சிகளுடன் கலை நிகழ்ச்சி களும் எழுச்சியோடு நடைபெறுகின்றன. ரூ.37 கோடி ரூபாய் செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலையையும் - விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழை பாலம் திறந்து வைக்கப்படுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு, 25 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளதைத் தொடர்ந்து இன்று (30.12.2024) முதல் 1.1.2025 வரை மூன்று நாள்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் வெள்ளி விழா நிகழ்ச்சியை வெகு சிறப்பாக நடத்துகிறார்கள்.

இதன் காரணமாக முக்கடல்கள் கூடும் குமரிமுனை இன்று விழாக் கோலம் கண்டு குதூகலம் அடைகிறது.

அய்யன் திருவள்ளுவர் சிலை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 25 ஆண்டுகளுக்குமுன் புத்தாயிரம் ஆண்டின் முதல் நாள் 1.1.2000 அன்று குமரி முனையில் திறந்து வைக்கப்பட்ட மாபெரும் விழா உலகமே பாராட்ட - ஈழம், சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, ஜப்பான் முதலான பல வெளிநாடுகளிலிருந்து அறிஞர் பெருமக்களும், அய்யன் திருவள்ளுவர்பால் பற்றும், பாசமும் கொண்டுள்ள சான்றோர்களும், இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், ஒட்டுமொத்த தமிழகத்திலிருந்து பேரறிஞர்களும், பொதுமக்களும் திரளாக வருகை தந்து விழாவைப் பெருமைப் படுத்தி வெற்றி தேடித் தந்தனர்.

வரலாற்றுப் பொன்னாள் - கலைஞர் எழுத்து!

அய்யன் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்ட மாபெரும் வரலாற்றுப் பொன்னாள் குறித்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'நெஞ்சுக்கு நீதி'யில் பின் வருமாறு விரிவாக எழுதியுள்ளார்கள்.

"விண்முட்டும் திருவள்ளுவர் சிலையினைக் குவிந்திருந்த இலட்சக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களின் வாழ்த்துகளுடன் நான் திறந்து வைத்தேன். விழாவினை நேரில் கண்ணுற்றோர் வாழ்வில் பெரும் பேறு பெற்றோர் எனும் அளவிற்கு எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது அந்த விழா.

கண்ணொளி கொண்ட தமிழரெல்லாம் கண்டு களித்த காட்சி! செவிப்பறை சிறிதும் பழுதுபடாத தமிழனெல்லாம் கேட்டு இன்புற்ற நிகழ்ச்சி! இதயமுள்ள தமிழனெல்லாம் உணர்ச்சியால் உந்தியெழுந்து குதித்திட்ட எழுச்சி! ஆம்: முக்கடலும் தம் அலை இதழ்களால் முத்தமிட்டு மயங்கும் குமரிக் கடற்கரையில் - முப்பால் யாத்த ஞானத் தமிழ் அய்யன் திருவள்ளுவருக்கு விண்முட்டும் சிலை வடித்து - அதைத் திறந்து வைத்திடும் வாய்ப்பு அமைந்ததே; அந்த வாய்ப்பு என் வாழ்நாளில் என் நினைப்புக்கும், உழைப்புக்கும் கிடைத்த வரமல்லவா?

வழக்கமாகக் கதைகளிலும், புராணங்களிலும் வரம் பெறுவோர் எல்லாம் தம்மை வலுப்படுத்திக் கொண்டு, தமது ஆதிக்கத்தை அகல விரிப்பதிலேயே அக்கறை செலுத்துவர். ஆனால் எனக்கோ, கிடைத்த வரம், என் அய்யன் திருவள்ளுவனைச் சிலையாகக் கண்டிட - அதுவும் அவன் குறளில் எத்தனை அதிகாரம் இயற்றினானோ - அத்தனை அதிகாரம்; அதாவது 133 அதிகாரங்களைக் குறிக்கும் 133 அடி சிலையை - இந்தியப் பூபாகத்தில் வட இமயத்துக்கு நிகராகத் திகழும் தென் குமரியில் நிறுவிட முடியும் என்னால் என்ற வரமல்லவா?

அந்த வரத்தைத் தவற விட்டிடாமல் அதனை நிறைவேற்ற வேண்டுமே என்பதற்காக, 25 ஆண்டு காலம் நித்தமும் தவம் செய்தேன் - அந்தத் தவம் பலித்தது - என்தாபம் தணிந்தது - பிறவியெடுத்த பயனைக் கண்டேன், முழுமையாக!

அந்தச் சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது, என் விரல் என்னை அறியாமல் அசைவற்றுப் போனது. மட்டுமல்ல - என்னையே நான் மறந்துவிட்டேன். நாதசுர இசைவாணர்களும், தவில் வித்வான்களும், அவர்தம் பக்க வாத்தியக்காரர்களுமாக சுமார் முன்னூறுக்கு மேற்பட்டோர்; அய்யனின் சிலை திறக்கப்பட்டபோது இசை முழக்கம் திக்கெட்டும் எட்டிடச் செய்தார்களாம்! மறுநாள் காலையில் மற்றவர்கள் சொல்லக் கேட்டுத்தான் 133 நாயன இசை ஒலித்த செய்தியே எனக்குத் தெரியும்! அந்த அளவுக்கு மெய் மறந்து போயிருந்திருக்கிறேன்! சுமார் முக்கால் மணி நேரம் பேசியிருக்கிறேன்!

1975ஆம் ஆண்டு (31.12.1975) நான் முதல்வராக இருந்த காலகட்டத்தில், அமைச்சரவைக் கூட்டத்தில் குமரிமுனையில் வள்ளுவர் சிலை அமைத்திட முடிவு எடுத்து. 1975 டிசம்பர் 31ல் அறிவிப்பு அறிவிக்கப்பட்டது

இளமைப் பருவம் முதல் எந்தவொரு தத்துவ வித்தகனை இமைப்பொழுதும் மறவாமல் - எழுத்தில், பேச்சில், இயக்கத்தில் நினைவுபடுத்திக்கொண்டே இருந்தேனோ - யாருக்கு வரலாறு போற்றும் வள்ளுவர் கோட்டம் அமைத்தேனோ - யாருக்காக ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என அறிவித்தேனோ - பேருந்துகளிலும், பயணியர் விடுதிகளிலும், ஒழுக்கம் போதிக்கும் குறளை எந்த ஒளிமிகு ஏந்தலுக்காக எழுதச் செய்து உருவப்படத்துடன் அமைத்தேனோ - யாருடைய குறளுக்கு குறளோவியம் தீட்டி; பின்னர் 1,330 குறளுக்கும் உரையும் எழுதினேனோ - அந்த அய்யன் திருவள்ளுவருக்கு இருபத்து ஐந்து ஆண்டு காலப் பெரு மூச்சுக்குப் பிறகு சிலை அமைந்தது - அதைத் திறந்து வைக்க எனக்கு ஆயுளும் இருந்தது என்கிறபோது என் மன நிலையை வர்ணித்திட தமிழ்த்தாய் தன்னிடமும் சொற்களுக்குப் பஞ்சமென்று சொல்லிவிட்டாளே, நான் என்ன செய்ய !" - என்று பெருமிதஉணர்வு மிளிர எழுதியுள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர்.

எழுச்சிக் கோலம்!

அந்த மாபெரும் வரலாற்றுப் பொன்னேடு மலர்ந்த புனித நன்னாள் 25 ஆண்டுகளுக்குப்பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இன்று மீண்டும் எழுச்சிக் கோலம் கொண்டு வெள்ளி விழா என்னும் முத்திரையோடு கன்னியாகுமரி மட்டும் அல்ல; தமிழ்நாடு முழுவதுமே விழாவின் வீச்சினை பரப்பி நிற்கிறது.

இன்று தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுப் பல்வேறு முத்திரைச் சாதனைகளை நிகழ்த்தி இந்திய நாடு முழுவதிலும் மட்டும் அல்ல; உலகின் பல்வேறு நாடுகளிலும் புகழ்க் கதிர் வீசிவரும் உதயசூரியன் - திராவிடநாயகர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறார்.

வெள்ளி விழாப் பணிகள்!

அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்ட வெள்ளி விழா ஆண்டு நிறைவையொட்டி சில வெள்ளி விழாப்பணிகள் திராவிட மாடல் அரசின் சார்பில் மேற்கொள்ளப்படும் என 12.12.2024 அன்று அறிவித்திருந்தார். இந்த வெள்ளிவிழாப் பணிகளை நிறைவேற்றுவதற்காக, மொத்தம் 10 கோடியே 89 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தார்கள்.

- பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டிகள், கல்லூரி மாணவர்களிடையே சோஷியல் மீடியாவில் ஷார்ட்ஸ் - ரீல்ஸ் - ஏ.ஐ மற்றும் டிஜிட்டல் தொழில் நுட்பங்கள் வாயிலாக திருக்குறளின் சிறப்பை உணர்த்தும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.
- அய்யன் திருவள்ளுவரின் சிலை நிறுவப்பட்டிருக்கின்ற இடங்கள் வரைபடத்தில் குறிக்கப்பட்டு, எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- அய்யன் திருவள்ளுவரின் திருவுருவச்சிலை அருகே சீரொளிக் காட்சி (3D Laser) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- வெளிநாட்டில் இருக்கின்ற தமிழ் இணையக் கழக மையங்கள், தமிழ்ச் சங்கங்கள், பிற மாநிலங்களில் இருக்கும் தமிழ்ச் சங்கங்கள், புது டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் யூடியூப் மூலம் இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றது.
- வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு தமிழ் இணையக் கழக மையங்கள் மூலமாகத் திருக்குறளின் பெருமைகள் குறித்த போட்டிகள் நடத்தப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட நூலகங்களிலும், இன்றைய விழா நாளில் திருவள்ளுவர் புகைப்படம் வைக்கப்பட்டு திருக்குறளின் பெருமைகளை உணர்த்துகின்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுத் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கப்படுகிறது.
- திருக்குறள் விளக்க உரைகள் மற்றும் திருக்குறள் தொடர்பான புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.
- டிசம்பர் 25 முதல் 30 வரை மாவட்ட அளவில் திருக்குறள் தொடர்பான கருத்தரங்கம், பேச்சரங்கம் முதலியவை நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இப்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவிய 25ஆம் ஆண்டு நிறைவு வெள்ளிவிழாவை மூன்று நாள் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

முதல் நாள் நிகழ்ச்சிகள்!

முதல் நாள் நிகழ்ச்சிகள் இன்று (30.12.2024, திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்குகிறது.

அத்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தீவிர முயற்சிகளின் பயனாக 37 கோடி ரூபாய் செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி இழை பாலம் கட்டப்பட்டு அதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

அத்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்குறள் நெறிபரப்பும் 25 தகைமையாளர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கிறார்கள்.

மாலை 7 மணிக்கு கலைமாமணி சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் தலைமையில் "திருக்குறளால் அதிக நன்மை தனிமனிதருக்கே - சமுதாயத்திற்கே" எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

பட்டிமன்றத்தில் தனிமனிதருக்கே எனும் கருத்தை வலியுறுத்தி தா.இராஜாராம், சே.மோகனசுந்தரம், மதுக்கூர் இராமலிங்கம் ஆகியோர் வாதிடுகிறார்கள்.

சமுதாயத்திற்கே எனும் கருத்தை வலியுறுத்தி புலவர் இரெ.சண்முகவடிவேல், பேராசிரியர் பர்வீன் சுல்தானா, ராஜா ஆகியோர் வாதிடுகிறார்கள்.

சொல்வேந்தர் சுகி.சிவம் அவர்கள் தீர்ப்பு வழங்கி உரையாற்றுகிறார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்!

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நாளை (31.12.2024 - செவ்வாய்க்கிழமை) தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வரவேற்புரையாற்றுகிறார்.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் முன்னிலை யேற்று உரையாற்றுகிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் தோரண வாயிலுக்கு அடிக்கல் நாட்டி; திருவுருவச் சிலை வெள்ளிவிழாச் சிறப்பு மலரை வெளியிட்டு; திருக்குறள் சார்ந்த போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ- மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கி விழாப் பேருரை நிகழ்த்துகிறார்.

அதனைத் தொடர்ந்து, பியானோ இசைக் கலைஞர் செல்வன் லிடியன் நாதஸ்வரத்தின் திருக்குறள் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா நன்றி கூறுகிறார்.

கருத்தரங்கம்!

தொடர்ந்து காலை 11.30 மணிக்கு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் கருத்தரங்கம் தொடங்குகிறது.

பேராசிரியர் அ.கருணானந்தன் 'சமகாலத்தில் வள்ளுவர்' எனும் தலைப்பிலும், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் 'திருக்குறளும் சங்க இலக்கியமும்' எனும் தலைப்பிலும், புலவர் செந்தலை ந.கவுதமன் 'வள்ளுவம் போற்றும் சமய நல்லிணக்கம்' எனும் தலைப்பிலும், வழக்கறிஞர் அருள்மொழி 'திருக்குறள் போற்றும் மகளிர் மாண்பு' எனும் தலைப்பிலும், கரு.பழனியப்பன் 'வள்ளுவம் காட்டும் அறம்' எனும் தலைப்பிலும், பேராசிரியர் விஜய சுந்தரி 'திருக்குறளில் இசை நுணுக்கம்' எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தி அய்யன் திருவள்ளுவரின் பெருமைகளை அகிலத்திற்கு எடுத்துரைப்பர்.

தொடர்ந்து மாலை 4.30 மணி முதல் 7.30 மணி வரை பல்வேறு கலைஞர்கள் பங்குபெறும் அரிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

நிறைவு நாள் நிகழ்ச்சிகள்!

1.1.2025 புதன்கிழமை நிறைவு நாள் நிகழ்ச்சிகள் காலை 10 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்குகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி திருக்குறள் ஓவியக் கண்காட்சியைத் திறந்துவைத்து நினைவுப் பரிசுகள் வழங்குகிறார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆர்.அழகுமீனா, நன்றியுரை ஆற்றிட நாட்டுப்பண்ணுடன் அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா நிறைவுபெறுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1975-ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் 31.ஆம் நாள் சென்னை கோட்டையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குமரிமுனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு; 25 ஆண்டுகளுக்குப் பின் 1.1.2000 அன்று அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு அடுத்த 25 ஆண்டுகளுக்குப் பின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழாவை ஊரும் உலகமும் போற்றக் கொண்டாடி தமிழ் நெஞ்சங்கள் அனைத்தையும் உவகையில் துள்ளச் செய்துள்ளார்.

வேலூர் - இராணிப்பேட்டை - திருப்பத்தூர் மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை!

வேலூர்,டிச, 30- வேலூர், இராணிப்பேட்டை திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களின் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்று காலை வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். வழக்கறிஞர் அணி மண்டல பொறுப்பாளர்கள் சட்டத்துறை இணைச் செயலாளர் தாமரைச்செல்வன் சட்டத்துறைதுணை செயலாளர் என்.மருது கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக தி.மு.முகமது சகி - தாமரைச் செல்வன் பங்கேற்றனர்.

வேலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.இ.கோவிந்தராஜ் இராணிப்பேட்டை மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ். கே நந்தகுமார், வேலூர் அரசு வழக்கறிஞர் ராஜா, குடியாத்தம் பொன்முடி,ஆகியோர் வரவேற்று பேசினார்கள். இக்கூட்டத்தில் திருப்பத்தூர் இராணிப்பேட்டை வேலூர்ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் முன்னாள் நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இறுதியில் திருப்பத்தூர் மாவட்ட கழக வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஏ.சி.தேவகுமார் நன்றி கூறினார் .

கூட்டத்தில் வருகிற1 ந்தேதி ஜனவரி 18ஆம் தேதி சென்னையில் நடைபெற உள்ள சட்டத்துறை மூன்றாவது மாநில மாநாடு குறித்தும் 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற இராணிப்பேட்டை, திருப்பத்தூர், வேலூர் மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். உடன கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு - வேலூர் மாவட்டம்

கே.வி.குப்பம் ஒன்றிய தி.மு.க. சார்பில் லத்தேரியில் பொதுக்கூட்டம்!

ஈரோடு இறைவன் - ஏ.பி.நந்தகுமார் - தி.அ.முகமது சகி - டி.எம்.கதிர்ஆனந்த் சிறப்புரை!

வேலூர் டிசம்பர் 30 - வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மாநில இளைஞரணி செயலாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு லத்தேரி பஸ்ஸ்டாண்டில் திமுக அரசின் சாதனை விளக்க திமுக பொதுக்கூட்டம் இன்று (30.12.2024) நடக்கிறது.

கூட்டத்திற்கு கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றிய செயலாளர் இரா.முருகேசன் தலைமை தாங்குகிறார். ஒன்றிய அவை தலைவர் நாராயணன் அனை வரையும் வரவேற்று பேசுகிறார். துணை செயலாளர்கள் எம் .வெங்கடேசன்,அன்பழகன், கவிதா சிதம்பரம், எல்.கே. ராஜகோபால் கே. தட்சிணாமூர்த்தி, டி.என்.கே .சுரேஷ் வி .சிவகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி .நந்தகுமார் எம்.எல்.ஏ ,மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம் கதிர்ஆனந்த், தலைமை கழக பேச்சாளர் கலை இலக்கிய இணை அமைப்பாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

ஒன்றிய செயலாளர்கள் எல்.ரவிச்சந்திரன் கே.சீதாராமன் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.கே. சுந்தரவடிவேல், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சி.கோபி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே .தயாள மூர்த்தி தலைமை பொது குழு உறுப்பினர் வி.டி.சிவக்குமார்மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் எஸ் .பரிமளம் மாவட்ட கவுன்சிலர் கவிதா, சுதாசேகர், ஊராட்சி மன்ற தலைவர்கள் பாரதி வெங்கடேசன், ஆர்.ஜெயா முருகேசன், அமலு, மகேந்திரன் கலந்து கொள்கிறார்கள் நிகழ்ச்சியின் முடிவில் வாக்கு சாவடி முகவர் எம் .விஜயன் நன்றி கூறுகிறார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கே.வி.குப்பம் கிழக்கு ஒன்றிய திமுக செய்துள்ளது.



மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு தொகுதி திருமோகூர் ஊராட்சியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ காளமேக பெருமாள் திருக்கோயில் சுற்றி ரூபாய் 70 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி தொடக்கத்தினை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்த போது எடுத்த படம். இதில் கழக நிர்வாகிகள் ஆ. வெங்கடேசன் எம்.எல்.ஏ, ஒன்றிய செயலாளர் அ. பா. ரகுபதி, யூனியன் துணை சேர்மன் பாலாண்டி, ஊராட்சி மன்ற தலைவர் அண்ணாமலை மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.